பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | புரட்டாதி 05 | ஞாயிற்றுக்கிழமை | 21.09.2025 | அதிர்வு 051

## ஐ.தே.கவுக்கு சஜித் வாழ்த்து



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு

06



# திலீபனின் வரலாற்றை எடுத்தியம்பும் ஆவணக் காட்சியகம் நல்லூரில் திறப்பு



(எஸ்.நிதர்ஷன்)

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எதிர்கால சந்ததியினருக்குக் கடத்தும் முகமாக அவரின் வரலாற்றை எடுத்தியம்பும் "பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!" எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்று சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

06

# தியாக தீபத்துக்கு அஞ்சலி செலுத்திய ரஜீவன் எம்.பி.





(எஸ்.நிதர்ஷன்)

யாழ். நல்லூர் பின் வீதியில் தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு அருகில் திறந்து

02




போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா தமது உண்மை முகத்தைக் கடைசியில் வெளிப்படையாகக் காட்டி விட்டார்.

இந்தத் திசையில்தான் அவர் செயல்படுகின்றார் என்பதை என் பத்தியில் எப்போதிருந்தோ நான் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கோடிகாட்டியே வந்திருக்கிறேன் என்பதை என் வாசகர்கள் அறிவார்கள். வெளியில் பகிரங்கமாக இந்த விடயங்களை அம்பலப்படுத்தாமல், நாசூக்காக காங்கேசன்துறை அபிவிருத்தி திட்டம் மற்றும் பலாலி சர்வதேச விமானப் போக்குவரத்து விரிவாக்க நடவடிக்கைகளை அவர் ஆப்படித்துக் குழப்பி வருகிறார் என்பதை நான் அப்பட்டமாகவே இப்பத்தியில் குறிப்பிட்டு வந்திருக்கிறேன். அது மாத்திரமல்ல. அவரது அந்தப் போக்கு இந்தியத் தரப்புக்கு சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதையும் கோடி காட்டி வந்திருந்தேன்.

நான்கு மாதங்களுக்கு முன்னர் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா யாழ்ப்பாணம்

06

# யாழ்.மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதான காணிக்குள் துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிப்பு!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமையப் பெறவுள்ள காணிக்குள் இருந்து ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவுப் பகுதியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் நேற்று சனிக்கிழமை மைதானம் அமையவுள்ள காணிகளைத் துப்பரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது, குழாய் ஒன்றுக்குள் இருந்து ரி - 56 ரக துப்பாக்கிகளின் ஒரு தொகை ரவைகள் காணப்பட்டன.

அதனைத் தொடர்ந்து, அவை தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்துப் பொலிஸார் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று ரவைகளை மீட்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# ஐ.நா. பொதுச் சபையில் புதன்கிழமை அநுர உரை



நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 79 ஆவது கூட்டத் தொடரில் எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றவுள்ளார்.

ஐ.நா. வெளியிட்ட திருத்தப்பட்ட தற்காலிக பேச்சாளர்க ளின் பட்டியலின்படி, குறித்த தினத்தில் ஜனாதிபதி பிற்பகல் அமர்வில் உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 23 முதல் 29 ஆம் திகதி வரை இந்தக் கூட்டத் தொடர் நடைபெறவுள்ளது.

அரச தலைவராக தனது முதல் ஐ.நா. பொதுச் சபை உரை யில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல், பொருளாதார மறுமலர்ச்சி முயற்சிகள் மற்றும் காலநிலை நடவடிக்கை, நிலையான வளர்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு உள்ளிட்ட உலகளா விய பிரச்சினைகள் குறித்து அரசின் நிலைப்பாட்டைச் சுட்டிக் காட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# அரசியலுக்கு வரும் முன்பும் நாங்கள் யாசகர்கள் அல்ல

## பிரதி அமைச்சர் நளின் ஹேவகே தெரிவிப்பு

தொழிற்கல்விப் பிரதி அமைச்சர் நளின் ஹேவகே, தனது சொத்துக்கள் குறித்த சமீபத்திய அறிக்கைகளைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

இதன்படி வங்கி வைப்புத்தொகைகளில் தனது மக ளுக்கு பரிசளிக்கப்பட்ட நிதியும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நளின் ஹேவகேவிற்கு சுமார் 2.2 மில்லியன் ரூபா வங்கிக் கணக்குகளும், 2.4 மில்லியன் ரூபா மதிப்புள்ள நிலமும் இருப்பதாகக் கூறும் செய்திகள் வெளியான தையடுத்து, அவர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

தனது வங்கிக் கணக்குகளில் உள்ள பணம், ஜனவரி முதலாம் திகதி விழாவொன்றின் போது கிடைத்த பணமும் அடங்குவதாக அவர் தெரிவித்தார்.

மேலும், அரசியலில் நுழைவதற்கு முன் தனது நிலம் வாங்கப்பட்டது என்று ஹேவகே சுட்டிக்காட்டினார்.

அத்துடன், நாங்கள் யாசகர்கள் அல்ல எனவும், நான்



பட்டம் முடித்து அரசாங்க ஆசிரியராகப் பணியாற்றியபோது அந்த காணியை வாங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தியாக தீபத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைக்கப்பட்டுள்ள தியாக தீபம் திலீபனின் ஆவணக் காட்சியகத்துக்கு நேரில் சென்ற தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், அங்கிருந்த தியாக தீபத்தின் திருவுருவச் சிலைக்கு அஞ்சலி செலுத்தியதுடன் ஆவணக் காட்சியகத்தையும் பார்வையிட்டார்.

தியாக தீபம் திலீபனின் நினைவுக ளைத் தாங்கிய ஆவணக் காட்சியகம் நேற்று மாலை திறந்து வைக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு சென்ற ரஜீவன் எம்.பி. தியாக தீபத்திற்கு அஞ்சலி செலுத்தினார்.

கடந்த வியாழக்கிழமை தியாக தீபம் திலீபனின் நினைவிடத்துக்கு அஞ்சலி செலுத்தச் சென்ற அமைச்சர் இராமலிங் கம் சந்திரசேகரைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இடைமறித்து, அஞ்சலி செலுத்த விடாது திருப்பி அனுப்பி இருந் தமை குறிப்பிடத்தக்கது.

# இ.போ.சவில் சேர்க்கப்படும் பெண் சாரதிகளுக்கு விமானப் பணிப்பெண்களைப் போல் சீருடைகள்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு






இலங்கை போக்குவரத்து சபையில் அறிமுகப்படுத்தப்படும் சீர்திருத்தங்களின் கீழ், புதிதாக பணியமர்த்தப்படும் பெண் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு விமானப் பணிப்பெண்களைப் போலவே சீருடைகள் வழங்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தலங்கம இலங்கை போக்குவரத்து சபை பஸ் நிலையத்தில் 25 டிப்போக்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் பிமல் ரத்நாயக்க இதனைக் குறிப்பிட்டார்.

இளைய தலைமுறையினர் இலங்கை போக்குவரத்து சபையை ஒரு கவர்ச்சிகரமான பணியிடமாகப் பார்க்கும் வகையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை போக்குவரத்து சபையில் பெண் ஊழியர்கள் உட்பட 450 சாரதிகள் மற்றும் 300 நடத்துனர்களை நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதற்கான நேர்காணல்கள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெண்களை பணியமர்த்துவதற்கு முன்பு அவர்களுக்கு போதுமான பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை உறுதி செய்ய வேண்டும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க கூறினார்.

இந்தநிலையில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள பாடசாலை பேருந்துகளில் பெண் ஊழியர்களை பணியமர்த்துவதே ஆரம்ப திட்டம் என்றும், இது கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

# வித்தியாசங்களின் விளைவிடமாக அரங்கம் காணும் ஹைக்கூ கவியமர்வு

சர்வதேச சமாதான தினமாகிய இன்று ஞாயிற்றுக்கிழமை புதிய அலை கலை வட்ட இளைஞர் அணியினர் மாதாந்தம் நடத்தும் ஹைக்கூ கவியரங்கின் நான்காவது அமர்வு நடைபெறவுள்ளது.

சுயாதீன ஊடகவியலாளரும் கவிதாயினியுமாகிய திருமதி மேரி ஸ்ரேலா இந்த அமர்வுக்குத் தலைமை ஏற்கின்றார்.

கொழும்பு – 13, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள எக்ஸலன்ஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் வித்தியாசமான அம்சமாக, முற்றிலும் இளங்கலைஞர்கள் ஒன்றிணைந்து உருவாக்கி – வெகுவிரைவில் திரையிடப்படவுள்ள "சனாதனனின் மௌன மொழி" என்ற முழுநீளத் திரைப்படக் கலைஞர்கள் பங்கேற்கும் முன்னோட்ட நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஹைக்கூ கவிபாட விரும்பும் ஆர்வலர்கள் உடனே 075 4880172 என்ற வட்சப் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# கொழும்பு துறைமுகத்தில் இந்தியப் போர்க்கப்பல்




இந்திய கடற்படைக் கப்பலான ஐ.என்.எஸ் சத்புத்ரா நேற்று விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பலை கடற்படை மரபுகளின்படி இலங்கை கடற்படையினர் கொழும்பு துறைமுகத்தில் வரவேற்றனர்.

நாட்டை வந்தடைந்துள்ள Frigate வகைக்குரிய ஐ.என்.எஸ் சத்புத்ரா என்ற கப்பல் 142.5 மீற்றர் நீளம் கொண்டதுடன், 403 பேரினை கொண்ட அங்கத்துவ குழுவினரைக் கொண்டுள்ளது.

இந்தக் கப்பலின் கட்டளை அதிகாரியாக கெப்டன் விகாஸ் கர்க் கடமையாற்றுகின்றார்.

ஐ.என்.எஸ் சத்புத்ரா கப்பல் நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில், கப்பலின் அங்கத்துவ குழுவினர்கள் நாட்டிலுள்ள பல சுவாரஸ்யமான இடங்களைப் பார்வையிடவும் திட்டமிட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்ற சமையலறையில் எலிகளும், கரப்பான் பூச்சிகளும்



இலங்கை நாடாளுமன்ற உணவகத்தில் கடுமையான சுகாதாரப் பிரச்சினை இருப்பதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன எடுத்துரைத்துள்ளார்.

நிகழ்வொன்றில் உரையாற்றிய போது இதனை தெரிவித்த அவர், நாடாளுமன்ற கட்டடம் 40 ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டதிலிருந்து, வளாகத்திற்குள் உணவு தயாரிப்பு நிலைமைகளை சரிபார்க்க எந்த பொது சுகாதார பரிசோதகர்களோ அல்லது சுகாதார அதிகாரிகளோ அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என்று தெரிவித்தார்.

“கடந்த ஏப்ரல் மாதம், நாடாளுமன்ற வளாகத்திற்குள் உணவு பாதுகாப்பு நிலைமையை ஆய்வுசெய்யுமாறு பத்தரமுல்லை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொது சுகாதார அதிகாரிகளை நான் கேட்டுக் கொண்டேன், அவர்கள் எனக்கு ஒரு அறிக்கையை வழங்கினர்,” என்று அவர் கூறினார்.

இந்த ஆய்வில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவு சேர்க்கைகள், எலிகள் மற்றும் கரப்பான் பூச்சிகளின் எச்சங்கள், உடைந்த தரை மற்றும் சேதமடைந்த சமையல் பாத்திரங்கள் கண்டறியப்பட்டன என அவர் குறிப்பிட்டார்.

“இந்த அறிக்கை இன்னும் ஊடகங்களுக்கு வெளியிடப்படவில்லை, ஆனால் அது எதிர்வரும் நாட்களில் வெளியிடப்படும் என்று நான் நம்புகிறேன்” என்று அவர் கூறினார்.

பிரச்சினையின் தீவிரத்தை எடுத்துரைத்த சபாநாயகர், சட்டமூலமொன்றை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படும் ஒரு முக்கியமான நாளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உணவு விஷமடைந்து பாதிக்கப்பட்டால் ஏற்படும் அபாயங்கள் குறித்து எச்சரித்தார்.

# கடன் அட்டைகளின் எண்ணிக்கை இந்த ஆண்டு 3.8 வீதம் அதிகரிப்பு

நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியடைந்து வரும் வட்டி விகிதங்களுக்கு மத்தியில், 2025 ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் 12,325 புதிய கடன் அட்டைகள் பாவனைக்கு வந்துள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜுன் மாத இறுதியில் 20 இலட்சத்து 75 ஆயிரத்து 744 கடன் அட்டைகள் பாவனையில் இருந்ததுடன், அந்த எண்ணிக்கை ஜுலை மாத இறுதிக்குள் 20 லட்சத்து 88 ஆயிரத்து 69 ஆக பதிவாகியுள்ளது.

இது ஜுலை மாதத்தில் 0.59 சதவீத அதிகரிப்பைக் காட்டுகின்றது.

இதேவேளை இந்த ஆண்டின் முதல் ஏழு மாதங்களில், கடன் அட்டைகளின் எண்ணிக்கை 3.8 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.



# நல்லூரில் திலீபனின் ஆவணக் காட்சியகம்

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)





















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்ற தினத்தில், இது பற்றி என் பத்தியில் வெளிப்படையாகக் குறிப்பிட்டேன். அன்றைய தினம் எமது செய்தியாளர் இது குறித்து நேரடியாக அமைச்சரிடம் கேட்டபோது, இந்த இரண்டு விடயங்களையும் – பலாலி போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி ஆகிய இரண்டையும் – நான்கு மாதத்திற்குள் நிறைவு செய்து காட்டுவோம் என்று அப்போது வாய்ச்சவடால் அடித்துச் சென்றார் அவர்.

அது பற்றியும் அப்போது நமது பத்திரிகையில் செய்தி வெளியிட்டோம்.

இப்போது தமது உண்மை முகம் யாது என்பதை யாழ்ப்பாணத்தில் வைத்து பகிரங்கமாக அறிவித்து அவர் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

இந்திய உதவி திட்டங்களுடன் வடக்கை அபிவிருத்தி செய்து சர்வதேசத்துக்கும் – குறிப்பாக இந்தியாவுக்கும் – இலங்கைக்கும் இடையிலான போக்குவரத்து மையமாக வடக்கை மாற்றுவதற்கு இடம் அளிக்க மாட்டோம் என்பதுதான் அமைச்சர் பிமல் ரத்நாயக்காவின் இந்த அணுகு முறையின் அடிப்படை உள்ளாந்தமாகும்.

பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்தால் அது கட்டுநாயக்காவுக்கு நிகரான ஒன்றாக மாறிவிடும், அதனால் வடக்கின் பொருளாதாரம் மேம்படும், அதேபோல காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால் யாழ்ப்பாணம்மேம்பட்டுவிடும்,உற்பத்திப்போக்குவரத்துக்கு அது மையமாகிவிடும், அதற்கு அனுமதிக்க முடியாது என்ற பேரினவாத மேலாதிக்க சிந்தனைதான் அமைச்சரின் பதிலுக்கு பிரதான காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்த அபிவிருத்தி திட்டங்களை தடுப்பதற்கு, அவை சம்பந்தமான அமைச்சுப் பதவியில் நந்தி போல வந்து குந்திகொண்டு இருந்து, அர்த்தமற்ற விளக்கங்கள், வியாக்கியானங்கள், குறைபாடுகள், தரவு விளக்கங்கள் தந்து கொண்டிருக்கிறார் அமைச்சர்.

சில தினங்களுக்கு முன்னர் இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தமிழ் ஊடகவியலாளர்களை சந்தித்தபோது இது பற்றி அவரிடம் நேரடியாக கேட்கப்பட்டது. அமைச்சர் பிமல் ரத்நாயக்கா உறுதியாக திட்டங்களை எதிர்க்கிறார் என்பது அவருக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

ஆனாலும் அவற்றையும் தாண்டி இந்த விடயங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் உறுதியாக சூசகமாக நம்பிக்கை வெளியிட்டார்.

அதன் அர்த்தம், குந்தி இருக்கும் நந்தியை அகற்றிவிட்டு, இந்த விடயங்களை முன்னெடுக்க ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நடவடிக்கை எடுப்பார் என்று இந்தியத் தூதரக உயர் மட்டங்கள் நம்புகின்றன என்பதுதான்.

ஆனால் அது நடக்குமா என்பதுதான் கேள்வி.

இன்றைய ஜே.வி.பி. கட்டமைப்பில் – அதன் அரசியல் குழுவில் – முழுமையாக தங்கி அல்லது இணங்கி – இருக்கும் அல்லது அந்த அரசியல் குழுவுக்கு முழுமையாக கட்டுப்பட்டு செயற்படும் இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க அதிலிருந்து வெளியே வருவாரா என்பதுதான் முக்கிய விடயம்.

அங்குதான் பிடி இருக்கின்றது. அந்தப் பிடியை வைத்துக் கொண்டுதான் அமைச்சர் பிமல் ரத்நாயக்கா போன்றவர்கள் அரசுக்குள் அதிக ஆட்டம் போடுகிறார்கள். அவர்களை வெட்டி அடக்கி, நாட்டு நிர்வாகத்தை ஒழுங்காகக் கொண்டு செல்வது என்றால், வெளியில் தெரியாத ஜே.வி.பி. அரசியல் குழுவின் ஆதிக்கம் இல்லாமல் தனித்துவமாக செயல்படுகின்ற நிறைவேற்றதிகார ஜனாதிபதி முக்கியம்.

அப்படிக்கு செற்படுவதற்கு அநுர குமார திஸநாயக்க தயாரா? அவர் தயார் என்றால் இந்தியத் தூதரக உயர்மட்டங்கள் கருதுகின்றமை போல காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தியும், பலாலி சர்வதேச விமான நிலைய அபிவிருத்தியும் இந்திய உதவியோடு முன்னெடுக்கப்படும் வாய்ப்பு பிமல் ரத்நாயக்கா போன்ற ஜே.வி.பி. தீவிரப் போக்காளர்களை மீறி முன்னெடுக்கப்படும்.

குறைந்தபட்சம் இந்த விடயங்களை இனிமுன்னெடுப்பதாயின், அந்தப்போக்குவரத்து, துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சுக்கு பிமல் ரத்நாயக்கா அல்லாத ஒருவர் அமைச்சரானால் மாத்திரமே அது சாத்தியமாகும்.

பிமல் ரத்நாயக்காவை அரசியல் ரீதியாக பகைத்துக் கொள்ள முடியாத நிலையில் ஜே.வி.பி. அரசியல் குழுவில் சிக்குப்பட்டு இருக்கும் அநுர குமார திஸநாயக்க வேண்டுமானால் பிமல் ரத்நாயக்காவுக்கு ஒரு 'புரமோஷன்' மாதிரி இதற்கு மேற்பட்ட ஒரு பதவியைக் கொடுத்து, அவரது தற்போதைய இடத்துக்கு இந்தியப் போக்கோடு சேர்ந்து செயல்படக்கூடிய வேறு ஒருவரை நியமிக்கலாம்.

அப்படி புரமோஷன் கொடுப்பதாயின் இருக்கும் வழி ஒன்றில் அவருக்கு வெளிவிவகார அமைச்சர் பதவியை கொடுப்பது அல்லது பிரதமர் பதவியைக் கொடுப்பது.

இரண்டுமே ஜனாதிபதி ஜனாதிபதி அநுரகுமாரதிஸநாயக்கவுக்கு வினையை விலைக்கு வேண்டித் தரும் விபரீதம் தான். இப்போது ஆளுங்கட்சி கொரடாவாக இருந்து கொண்டு நாடாளுமன்றத்தில் எடுத்ததற்கெல்லாம் அட்டகாச அணுகுமுறையை பின்பற்றும் பிமல் ரத்நாயக்காவிடம் வெளிவிவகார அமைச்சுப் பதவியை ஒப்படைத்தால் அது ஜனாதிபதிக்கு விநாச காலமச்சி விடும்.

அதேபோல பிரதமர் பதவியை ஒப்படைத்தால், ஒருபுறம் தேசிய மக்கள் சக்தி என்ற கூட்டும் குழம்பும். அல்லது எல்லா அமைச்சுகள் மீதும் பிமல் ரத்நாயக்காவின் தலையீடு கூடி ஜனாதிபதிக்கு நெருக்கடி அதிகரிக்கும்.

எப்படிப் பார்த்தாலும் இனிமேல் இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டுவது – இந்தியாவைச் சமாளிப்பது – வடக்கு, கிழக்குக்கு நியாயத்தைச் செய்வது – ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்காவுக்கு சிக்கலான விடயங்கள்தான்.

தமக்கே உரித்தான நிறைவேற்றதிகாரங்களை அவர் கையில் எடுத்து, அந்த உரித்தோடு கட்சி சகாக்கள் விடயத்தில், ஆட்சி நிர்வாக லகானை ஒரு கையிலும், அதிகார சவுக்கை மறு கையிலும் எடுத்து தனித்து செயல்பட அவர் முன்வந்தால் மட்டும்தான் – அதற்கான முதுகெலும்பு அவருக்கு இருந்தால் மட்டும்தான் – இந்த விடயங்கள் எல்லாம் சாத்தியமாகும்.

அப்படியாவது நடக்கும் என்று நம்புவோமாக...!

## திலீபனின் வரலாற்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் நேற்று மாலை 6.30 மணியளவில் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இந்த ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலரஞ்சலி செலுத்தப்பட்டு வரலாற்று ஆவணக் காட்சியகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆவணக் காட்சியகத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலை மூத்த போராளி பஷீர் காக்காவால் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டதுடன் சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் வரலாற்றுப் புகைப்படங்கள், பத்திரிகை ஆவணங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப்படுத்தப் பட்டது.

இந்த நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், முன்னாள் போராளிகள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## ஐ.தே.கவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவை முன்னிட்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில், இலங்கையின் சுதந்திரப் போராட்டத்துக்குப் பெரும் பங்காற்றிய சிலோன் தேசிய காங்கிரஸின் அனுபவத்தைக் கொண்டு டி.எஸ். சேனாநாயக்கவால் ஐக்கிய தேசியக் கட்சி நிறுவப்பட்டதை நினைவு கூர்ந்துள்ளார்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பர்கர்கள், மலாய்கள் உள்ளிட்ட பல வேறு சமூகங்களையும் ஒன்றிணைத்து, பொதுவான தேசிய இலக்கை நோக்கிப் பணியாற்றியதில் ஐக்கிய தேசியக் கட்சியின் பங்கு மிக முக்கியமானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நாட்டுக்கு ஆற்றிய சேவை அளப்பரியது எனக் குறிப்பிட்டுள்ள சஜித் பிரேமதாஸ, இன்றைய சூழலில் இலங்கையின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் அந்த நிகழ்வில் பங்கேற்கவில்லை. எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உட்பட அக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் மேற்படி நிகழ்வில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விசேட சுற்றிவளைப்பின்போது 38 துப்பாக்கிதாரிகள் சிக்கினர்!




நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப் பின் போது, பல்வேறு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய 38 துப்பாக்கிதாரிகள் கைது செய்யப்பட்டுள்ள னர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எப்.யு. வுட்லர் தெரி வித்துள்ளார்.

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் மேற்படி 38 துப்பாக்கிதாரிகளும் கைது செய்யப்பட்டுள்ள னர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார்.

நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்பு டைய 27 மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களும் கைது செய் யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்க உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் 263 பேரும், சந்தேகத்தின் பேரில் 328 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விசேட நடவடிக்கையின்போது ரி – 56 ரக துப்பாக் கிகள் 61 , பிஸ்டல் ரக துப்பாக்கிகள் 62, ரிவோல்வர் ரக துப்பாக்கிகள் 40 மற்றும் ஏனைய ரக துப்பாக்கிகள் 1,721 கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

# விரைவில் தேர்தலை நடத்துமாறு தயாசிறி அரசாங்கத்துக்கு சவால்



“மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம். 9 மாகாணசபைகளில் பெரும்பான் மையானவற்றை ஒருமித்து நாம் கைப்பற்றுவோம். அதற்காக வேலைத்திட்டங்களை இப்போதிருந்தே ஆரம்பிப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.”

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜய சேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி யின் 79 ஆவது சம்மேளனத்தில் கலந்து கொண்டு உரை யாற்றியபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

“பிரிந்தால் தோல்வி என்பது கடந்த தேர்தல்களில் எமக்கு நன்றாக புரிய வைக்கப்பட்டது. ஐ.தே.க.விலேயே பிளவுகள் ஆரம்பித்தன. 77 ஆண்டுகளின் பின்னர் பிளவுகளை ரணில் விக்கிரமசிங்கவால் சரி செய்ய முடிந்துள்ளது. கட்சிகள் பிள வடைந்தாலும் நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது. பல தசாப்தங்கள் நாடு அபிவிருத்தியடைவதை தடுத்துக் கொண்டிருந்தவர்கள் இளைஞர்களை மூளை சலவை செய்துள்ளனர்.

இவர்கள் நாடாளுமன்றத்தை தமது தேவைக்கேற்ப மாற்றுவோம் எனக் கூறுகின்றனர். அவ்வாறு செய்வ தற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம். எனவே இந்த ஒன்றிணைவை ஆசீர்வாதமாகவே நாம் பார்க்கின்றோம். அழைப்பு விடுக்கப்படாமலேயே ரணில் விக்கிரமசிங்கவுக் காக அனைவரும் ஒன்றிணைந்தனர். இதனால் அரசாங் கத்துக்கு மண்டியிட நேர்ந்தது.

அவ்வாறில்லை எனில் எதிர்தரப்பினர் அனைவரையும் அடுத்தடுத்து கைது செய்திருப்பர். எதிர்க்கட்சி அரசியல்வாதி யாக இருக்கும் ஒரேயொரு காரணத்துக்காக அவர்கள் கைது செய்யப்படுகின்றனர். வரலாற்றில் முதன்முறையாக அரசி யல் மேடையேறியவர் குற்றப்புலனாய்வு திணைக்களத் தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவரால் அனைவரும் இலக்கு வைக்கப்படுகின்றனர்.

கைது செய்யப்படுவதற்கு முன்னரே யார் கைது செய்யப்படப் போகின்றனர் என அமைச்சர்கள் கூறுகின்றனர். பங்களா– தேஷாகவோ நேபாளமாகவோ இலங்கை மாறுவதை ரணில் விக்கிரமசிங்கவே தடுத்தார். அதற்காக அவர் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தினார். ஆனால் அவர் அதன் ஊடாக மனித உரிமைகளை மீறியதாகக் கூறப்படுகிறது. இதற்கு எம்மிடம் பதில் இல்லை. இன்று அநுர ஆட்சி செய்வதற்கு நாடு எஞ்சியிருக்கிறது என்றால் அது ரணில் விக்கிரமசிங்கவால் தான்.

ரணில் வழங்கிய கையிருப்பு ஓராண்டு கடந்தும் அவ்வாறே இருக்கிறது. இவ்வாறு தொடர்ந்தும் பயணிக்க முடியாது. இந்த அரசாங்கம் நீண்ட காலம் பயணிக்காது. நாம் அனைவரும் இணைந்து இவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கான வேலைத் திட்டத்தை ஆரம்பிப்போம். மாகாணசபைத் தேர்தலை நடத் துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம். 9 மாகாண சபைகளில் பெரும்பான்மையானவற்றை ஒருமித்து நாம் கைப்பற்றுவோம்.” என்றார்.

# கிளிநொச்சியில் கஞ்சா மீட்பு!

கிளிநொச்சியில் கைவிடப்பட்ட வீடொன்றுக்கு அருகே மறைத்து வைக்கப்பட்டிருந்த 18.5 கிலோ கேரளா கஞ்சா பொதிகளைப் பொலி ஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் தர்மபுரம் பகுதியில் கிளிநொச்சி பொலிஸ் விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட தீவிர சோதனையின் போதே, கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கஞ்சா பொதிகள் தர்மபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக் கப்பட்டுள்ள நிலையில், இது தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தர்மபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# இந்த அரசுக்கு வாக்களித்த அரச ஊழியர்கள்இன்று வீதியில்

## தொழிற்சங்கத் தலைவர்களோ ஆட்சிக் கதிரைகளில் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சாடல்

“தற்போதைய அரசை ஆட்சிப்பீடமேற்றுவதற்கு அரச ஊழியர்கள் பெரும் பங்காற்றியிருந்தாலும், இன்று மின்சார சபை ஊழியர்கள் வீதியில் விடப்பட்டுள்ளனர். தபால் வாக்குகளில் அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுத் தந்த அரச ஊழியர் இன்று தமது தொழிலையைப் பாதுகாக்க வீதியில் இறங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அரச ஊழியர்களைப் பாதுகாப்போம் எனக் கூறிய அரசு தற்போது அவர்களைமிகமோசமாகநடத்திவருகின்றது. மின்சார சபையில் 23 ஆயிரம் ஊழியர்களினது தொழில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது. அரசு இவர்களை கைவிட்டு விட்டது. மின்சார சபையின் முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்கள் தற்போது உள்ளூராட்சி சபைகளில் தவிசாளர்களாக மாறிப் போதாக்குறைக்கு இந்த ஊழியர்களை அச்சுறுத்தியும் வருகின்றனர்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“மின்சார சபை மறுசீரமைக்கப்பட்டு, நவீனமயமாக்கலுக்கு உள்ளாகுவதாக இருந்தால் நல்லது. ஆனால் ஊழியர்களின் தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு புதிய பயணத்தை ஆரம்பிக்கும் போது, மாற்றங்களைச் செய்யும் போது, இந்தத் தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும். தொழிலாளர்களை வீதிக்கு இறக்குவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.” – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

கிராமத்துக்குக் கிராமம், நகரத்துக்கு நகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் எதிர்க்கட்சித் தலைவரின் நடமாடும் சேவையின் கீழ், அனுராதபுரம், ரம்பேவ கிராமத்தில் மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வருவோர் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சனிக்கிழமை நேரில் சென்று ஆராய்ந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசுகள் பலாத்காரத்தைப் பிரயோகிக்ககூடாது. மக்கள் நேயமாக நடந்துகொள்ள வேண்டும். மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஆதரவற்றவர்களுக்கும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கும் ஆதரவாக நிற்க வேண்டும். பக்க பலத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். பாதுகாப்புணவர்வைக் கொடுக்க வேண்டும். அதைவிடுத்து மக்களைத் தூரமாக்க இடமளிக்கக் கூடாது.

தெளிவான அதிகாரத்தைக் கொண்ட அரசு அமைந்திருக்கும் நேரத்தில், மக்களின் பிரச்சினைகளுக்குப் பதிலளிக்கவோ அல்லது தீர்க்கவோ அதிகாரம் இல்லாத எதிர்க்கட்சித் தலைவர் ஏன் கிராமங்களுக்கு வருகின்றார் என்று மக்கள் தயவோடு கேட்கின்றனர். ஆட்சியில் இருக்கும் அரசு மக்களின் பிரச்சினைகளுக்குப் பதில்களை வழங்காமையால்தான் எதிர்க்கட்சித் தலைவர் நடமாடும் சேவையை இவ்வாறு முன்னெடுத்து வருகின்றார்.

அரசு என்ன செய்தாலும், எதிர்க்கட்சித் தலைவரின் நடமாடும் சேவை என்பது பேச்சுக்களைப் போலவே செயல்கள் மூலம் சேவைகளைப் பெற்றுத் தரும் நடைமுறை ரீதியான செயற்றிட்டமாகும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், எனது கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றவும் முடிந்த வரை போராடுவேன்.

மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டு வருவோர் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வறட்சியான காலங்களில் அதிக களிமண்ணை பெற்றுக் கொள்ள முடியாமை, தேவையான விறகுகளைப் பெற வனப் பாதுகாப்பு மற்றும் அரச நிறுவனங்கள் மூலம் தேவைப்படும் தலையீடுகள், இயந்திரங்களில் காணப்படும் சிக்கல்கள், மழைக்காலத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க முடியுமான உபகரணங்களைப் பெறுதல், களிமண் மெருகூட்டல் இயந்திரத்தின் தேவை மற்றும் தமது உற்பத்தி வடிவமைப்புகளை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்த பொது கட்டடமொன்றை நிர்மாணித்தல், மின்சார அடுப்பைப் பெறுதல், களிமண் மெருகூட்டல் இயந்திரத்திற்கு சூரிய சக்தி வசதிகளைப் பெறுதல் மற்றும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளல்உள்ளிட்டஎட்டுவகையானபிரச்சினைகளை மட்பாண்டத் தொழிலுடன் தொடர்புடையோர் எதிர்நோக்கி வருகின்றனர். சூரிய சக்தி பிரச்சினை மற்றும் சந்தை வாய்ப்பு ஆகிய இரு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நான் ஒத்துழைப்பைப் பெற்றுத் தருவேன்.” – என்றார்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சர்வதேச பங்களிப்பு ஏன்?

இலங்கையில் இடம்பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் உள்ளகப்பொறிமுறை ஊடாகவன்றி, சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையின் ஊடாக மாத்திரமே அர்த்தமுள்ள பொறுப்புக்கூறலை அடைந்து கொள்ளமுடியும் என சர்வதேச குற்றவியல் சட்ட நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பும் இதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றன்றது.

தேசிய கனேடியத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் 'இலங்கையில் சர்வதேச பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தல்' எனும் தலைப்பிலான கலந்துரையாடலொன்று கடந்த வாரம் ஜெனிவா ஊடக அமையத்தில் நடைபெற்றிருக்கின்றது. இக்கலந்துரையாடலில் சர்வதேச குற்றவியல் வழக்கறிஞரான அலைன் வேனர், சர்வதேச சட்டத்தரணி மரியம் பொஸ்டி, பாலியல் மற்றும் பாலின வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர் ஜூலி டுபே கக்னன், தமிழ் சிவில் சமூக அமையத்தின் ஸ்ரீ ஞானேஸ்வரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

அவர்கள் உள்ளகப்பொறிமுறைகள் மூலமாகவன்றி, சுயாதீன சர்வதேச விசாரணைகளின் ஊடாக மாத்திரமே இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதி செய்யமுடியும் என்ற விடயத்தை வலியுறுத்தியிருக்கின்றனர்.

உள்நாட்டில் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு சர்வதேச பொறுப்புக்கூறல் செயன்முறையொன்று உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்பது அங்கு விரிவாக வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு பாதிக்கப்பட்ட தரப்பினர் மற்றும் தப்பிப்பிழைத்தோரின் நம்பிக்கையை வென்றெடுப்பது, குற்றவாளிகளைப் பொறுப்புக் கூற வைக்கக்கூடியதும், தமிழ் மக்களுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதுமான சர்வதேச சுயாதின விசாரணை மற்றும் வழக்குத்தொடரல் பொறிமுறையை விரைவாக ஸ்தாபிக்க வேண்டியதன் அவசியம், அண்மையில் கண்டறியப்பட்ட செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் நம்பகத்தன்மை வாய்ந்ததும், சுயாதீனமானதுமான சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்றை உடனடியாக நிறுவ வேண்டியதன் அவசியம் என்பனவெல்லாம் அங்கு வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் நீதித்துறையில் தனி ஆளுமைகள் இருக்கலாம். நேர்மையான நீதியரசர்கள் இன்றும் இடம் பெற்று இருக்கலாம். யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் நீதியாக விசாரித்து, நியாயமாக - மனசாட்சிப்படி - தீர்ப்பளிக்கக்கூடிய நீதியரசர்கள் இலங்கை நீதி கட்டமைப்பில் இருக்கலாம், ஆனால் இந்த மோசமான குற்றங்கள் தொடர்பில் நீதி நிலைநாட்டப்பட்டு, நியாயம் நடைமுறைப்படுத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்பு கூறல் முழு அளவில் செயல்படுத்தப்படுகின்றமைக்கு தனி நீதியரசர்கள் மற்றும் நீதிபதிகள் மட்டும் போதுமானவர்கள் அல்லர்.

யுத்தம் முடிந்து 16 ஆண்டு காலமாக இக்குற்றங்களுக்கு நீதி வழங்கப்படாமல் குற்ற விலக்களிப்பு நீடிப்பதற்கு, அரசினுடைய பொலிஸ், நீதிக் கட்டமைப்பின் பிற அங்கங்கள் யாவும் காரணம். இனவாத விடயங்களில் அவை ஒரு பக்கமாகச் செயல்படும் போக்குடையவை என்பது வெளிப்படையானது. அதனால்தான் அந்தக் கட்டமைப்பை ஏற்றுக் கொள்ள முடியாத ஏமாற்று வடிவம் என்று தமிழர்கள் கருதுகிறார்கள். சர்வதேசமும் அதை புரிந்து கொண்டமையால்தான் சர்வதேச நியமங்களுக்கு அமைவான - சர்வதேச பங்களிப்புடனான - நீதி விசாரணையை வலியுறுத்துகின்றன.

நீதி விசாரணை விவகாரங்களில் இலங்கை நீதிமன்றங்களை அலங்கரிக்கும் நீதித்தரப்பினர் மீது மாத்திரம் குற்றம் சுமத்தப்படுவதாக அர்த்தப்படுவது தவறு. அதற்கு அப்பால், குற்றச்சாட்டு விடயங்களை முன்னெடுக்க வேண்டிய புலனாய்வுத் துறையில் இருந்து தொடங்கி வழக்குத் தொடுக்க வேண்டிய சட்டமா அதிபர் தரப்பு வரை - அவற்றை இயக்குகின்ற அரசுப் பின்புலம் வரை - யாவுமே பேரினவாத சிந்தனையில், யுத்தத்தின் போது குற்றம் இழைத்த மிகப்பெரிய தரப்பான இலங்கை அரசு படைகளை காபந்து பண்ணுகின்ற பக்கச் சார்பான போக்கில், செற்படுகின்றன என்பதுதான் இதில் முக்கியமான கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.



# விவசாயிகளின் வயிற்றில் அடித்து நெல் கொள்வனவில் 'கொமிஷன்'

## திருவாரூரில் விஜய் காட்டம்

"நெல் கொள்முதல் நிலையங்களில், டெல்டா மாவட்ட விவசாயிகளிடம் இருந்து மூட்டை ஒன்றுக்கு 40 இந்திய ரூபா என பல கோடி ரூபாய் கொமிஷனாகப் பெறப்படுகிறது. இதற்கு முதல்வர் பதில் சொல்ல வேண்டும்."

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் நேற்று மதியம் நாகப்பட்டினத்தில் பிரச்சாரம் மேற்கொண்டார். அதன்பின், மாலை 5 மணி அளவில் திருவாரூர் தெற்கு வீதியில் நகராட்சி அலுவலகம் அருகே விஜய் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இதன்போது அவர் உரையாற்றுகையில்,

"திருவாரூர் என்றாலே தியாராஜர் கோயில் ஆழித்தேர் தான் ஞாபகத்துக்கு வரும். ஏனெனில், அது இந்த மண்ணோட அடையாளமாச்சே. ரொம்ப நாளா ஓடாத திருவாரூர் தேரை ஓட்டியது நான்தான் என்று மார்தட்டி சொன்னது யார் என்று உங்களுக்கு நல்லாவே தெரியும்.

உங்க அப்பா பெயர்ல பேனா வைக்கணும் சொல்றீங்க. எல்லா இடத்துக்கும் உங்க அப்பா பெயர வைக்கறீங்க. ஆனா, உங்க அப்பா பிறந்த இந்த திருவாரூர் மாவட்டத்துல அடிப்படை சாலை வசதி கூட சரியா இல்லையே சேர். நாகப்பட்டினம் போன்றே திருவாரூர்லயும் அதிகமா குடிசைப் பகுதிகள் இருக்கு. இங்க இருக்கும் பல்கலைக்கழகத்துல எல்லா துறைகளும் உள்ளதா? இருக்காதே! இங்க இருக்கற மருத்துவக் கல்லூரியே வைத்தியம் பார்க்க வேண்டிய நிலையிலதான் இருக்கு. இங்க இருக்கிற மருத்துவக் கல்லூரியில் எல்லா கருவிகளும் வேலை செய்யுதா? செய்யாதே!

உங்களுடன் ஸ்டாலின்... உங்களுடன் ஸ்டாலின்... உங்களுடன் ஸ்டாலின் என்று உங்க குடும்பத்துக்கு மட்டும்தான் நீங்க சொல்லிக்கணும். மக்கள்கிட்ட நீங்க அதை சொல்லவே முடியாது. ஏன் என்றால், நீங்கதான் மக்கள் கூடவே இல்லையே. இதை நான் சொல்லல. ஒரு ஃபேமசான வார பத்திரிகையில் சொல்லி இருக்காங்க. அதைத்தான் நான் சொல்றேன்.

டெல்டா பகுதியில இருக்கற விவசாயிங்க ஒரு கொடுமைய அனுபவச்சிகிட்டு இருக்காங்க. அதுபற்றி புகார் ஒன்று வந்தது. அது என்னன்னா, இந்த மாவட்டத்துல இருக்கிற நெல் கொள்முதல் மையங்கள்ல ஒரு மூட்டைக்கு 10 ரூபா கொடுக்கறாங்க. ஆனா, அதுக்கு மேல 40 ரூபா கொமிஷன் வாங்கறாங்க. ஒரு டன்னுக்கு 1,000 ரூபா கொமிஷன். நீங்க கணக்கு போட்டு பாத்தீங்கனா, கடந்த நான்கரை வருடங்கள் இந்த டெல்டா பகுதி விவசாயிங்க கிட்ட இருந்து கொமிஷனா பல கோடி புடுங்கி இருக்காங்க. இதை வேற யாராவது சொல்லி இருந்தாகூட நான் நம்பி இருக்க மாட்டேன். ஆனா, எங்கிட்ட சொன்னதே விவசாயிங்கதான். விவசாயிங்க பொய் சொல்ல மாட்டாங்க.

கேள்வி மேல் கேள்வி கேட்கிறேனே என யாரும் நினைக்காதீங்க. தீர்வைத் தேடி தீர்வை நோக்கி போவதுதான் தமிழக வெற்றிக் கழகத்தின் லட்சியமே. எங்கள் தேர்தல் அறிக்கையில் இதை விளக்கமாக தெரிவிப்போம். இந்த பொய்யான தேர்தல் அறிக்கையை நாங்கள் கொடுக்கவே மாட்டோம். எது நடப்பதற்கு சாத்தியமோ எது உண்மையோ அதை மட்டுமே சொல்லுவோம், அதை செய்வோம்.

கல்வி, ரேஷன், மருத்துவம், குடிநீர், அடிப்படை சாலை வசதி, மின்சாரம், பெண்கள் பாதுகாப்பு, சட்டம் – ஒழுங்கு என்று அடிப்படை விஷயங்களில் சமரத்துக்கு இடமே இல்லை. தமிழக வெற்றிக் கழகத்தின் தொலைநோக்குப் பார்வை என்ன என்பதை எளிமையா சொல்லணும்னா, ஏழ்மை, வறுமை இல்லாத தமிழகம், குடும்ப ஆதிக்கம் இல்லாத தமிழகம், ஊழல் இல்லாத தமிழகம், உண்மையான மக்களாட்சி, மனசாட்சி உள்ள மக்களாட்சி. இதுதான் எங்கள் லட்சியம்." என்றார்.

# நடிகர் மோகன்லாலுக்கு தாதாசாகேப் பால்கே விருது



நடிகர் மோகன்லாலுக்கு, 2023 ஆம் ஆண்டுக்கான தாதாசாகேப் பால்கே விருதை மத்திய அரசு அறிவித்துள்ளது. செப்டம்பர் 23 ஆம் திகதி நடைபெறும் 71 ஆவது தேசிய விருதுகள் விழாவில், இவ்விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது.

இந்திய சினிமாவில் ஆகச் சிறந்த நடிகர்களில் ஒருவராக இருப்பவர் மோகன்லால். மலையாள சினிமாவில் முன்னணி நடிகராகவும் வலம் வருகிறார். இவர் 400 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். திரைப்படத் துறைக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்காக 2001 ஆம் ஆண்டு பத்மஸ்ரீவிருதும், 2019 ஆம் ஆண்டு பத்ம பூஷன் விருதும் அவருக்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில், சினிமாவுக்கு அவர் அற்றிய பங்களிப்பை சிறப்பிக்கும் விதமாக, இந்திய சினிமாவில் மிக உயரிய விருதாக கருதப்படும் தாதாசாகேப் பால்கே விருதை அவருக்கு அறிவித்துள்ளது மத்திய அரசு.

செப்டம்பர் 23 ஆம் திகதி நடைபெறும் 71 ஆவது தேசிய விருதுகள் விழாவில், இவ்விருது அவருக்கு வழங்கப்பட உள்ளது. கடந்த ஆண்டு, நடிகர் மிதுன் சக்ரவர்த்திக்கு 2022 ஆம் ஆண்டுக்கான தாதா சாகேப் பால்கே விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# போதைப்பொருள் ஏற்றிச் சென்ற கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல்

## கரீபியன் கடலில் பதற்றம்

கரீபியன் கடலில் போதைப்பொருள் ஏற்றிச் சென்ற கப்பல் மீது அமெரிக்க கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர் எனவும் அவர்கள் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக அமெரிக்கா நடத்தும் மூன்றாவது தாக்குதல் இதுவாகும்.

முந்தைய இரண்டு தாக்குதல்களும் வெனிசுலா வழியாக போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக நடத்தப்பட்டன. இதில் 14 பேர் கொல்லப்பட்டனர்.













# ரஷ்யாவின் சமாரா பகுதியில் உக்ரைன் ட்ரோன் தாக்குதல்

ரஷ்யாவில் உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவின் தென்மேற்கு சமாரா பகுதியில் இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு இலக்காகி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் ரஷ்ய மற்றும் உக்ரைன் இடையிலான போர் நடைபெற்று வருகின்றது.

உக்ரைன் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு முழுவதும் நடத்திய வான்வழித் தாக்குதலில் மூன்று பேர் கொல்லப்பட்டனர்.

அத்தோடு, 30 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர். இதில் சிலர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உக்ரைன் முழுவதும் பல்வேறு இடங்களில் 600 இற்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியது.

சமீபத்திய வாரங்களில் உக்ரைன் மீதான அதன் வான்வழித் தாக்குதல்களை ரஷ்யா அதிகரித்துள்ளது.

இந்த சூழலில், ரஷ்யாவின் தென்மேற்கு சமாரா பகுதியில் உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

இந்தநிலையில், உக்ரைன் பகுதியில் இருந்து ஏவப்பட்ட 149 ட்ரோன்களை இடைமறித்து சுட்டு வீழ்த்தினோம் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

ரஷ்யா மீதான மிக மோசமான உக்ரைன் பதிலடி தாக்குதல்களில் இந்தத் தாக்குதலும் ஒன்று என தெரிவிக்கப்படுகின்றது.

ரஷ்ய ட்ரோன்கள் தங்கள் வான்வெளியில் அத்துமீறி நுழைந்ததாக போலந்து மற்றும் ருமேனியா கூறியதைத் தொடர்ந்து, சமீப காலமாக பதட்டங்கள் அதிகரித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.















# தமிழக முதல்வரின் பாராட்டுக் கடிதம் செந்தில் தொண்டமானிடம் கையளிப்பு

நேபாளத்தில் இடம்பெற்ற வன்முறையின்போது பலரின் உயிரை காப்பாற்றிய இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பாராட்டு தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த கடிதத்தை, திராவிட முன்னேற்ற கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா நேற்று செந்தில் தொண்டமானிடம் நேரில் கையளித்தார்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அந்தக் கடிதத்தில் குறிப்பிடுகையில்,

“நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் போராட்டக் காரர்களால் தீயிடப்பட்ட தனியார் விடுதியில் தங்கி இருந்த இந்தியர்களைக் காப்பாற்றிய தங்களது துணிவையும், தியாக உணர்வையும் பாராட்டுகிறேன்.

மானுடத்தின் மீதான பெருங்கருணையே இக்கட்டான தருணங்களில் துணிவாக வடிவெடுக்கிறது என்பதற்குத் தங்களது இந்தச் செயற்கரிய தீரச்செயலே சான்று.

தங்களது தியாக உணர்வையும், தீரச் செயலையும் மீண்டும் பாராட்டி வாழ்த்துகிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு – சௌமியபவனில் இந்த கடிதத்தை கையளித்ததன் பின்னரான ஊடக சந்திப்பில் கருத்து வெளியட்ட அப்துல்லா,

“தமிழக முதலமைச்சரின் உத்தரவின் பேரில் நான் இலங்கைக்கு வந்து செந்தில் தொண்டமானிடம் நேரடியாக இந்த கடிதத்தை வழங்கினேன்” என தெரிவித்தார்.

அதேநேரம் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர், செந்தில் தொண்டமான்,

“தமிழக முதலமைச்சர் தமிழக மக்களுக்கு மாத்திரமின்றி உலகெங்கும் வாழும் தமிழர்களின் தலைவராக காணப்படுகிறார். அவர் என் சேவையை பாராட்டி வாழ்த்து தெரிவித்தமைக்கு மிக்க நன்றி.

அந்த கடிதத்தை நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லா எடுத்து வந்தமை மகிழ்ச்சி அளிக்கிறது.” எனத் தெரிவித்தார்.













# திடம் கொள்வோம் பார்த்தீபன்...!

**தமிழ் மக்களுக்காக உண்ணாநோன்பு இருந்து தனது உயிரை ஆகுதியாக்கிய தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரிக்கப்படுகின்றது.**


காந்திய தேசத்துக்கே
அகிம்சையைப் போதித்த
தமிழினத்தின் வீரப் புதல்வனே
ஊரெழு பெற்ற தேசத்தின்
மைந்தன் பார்த்தீபன்...!

ராஜீவ் – ஜே.ஆர். சதிக் கூட்டில்
சிக்கிய தமிழினத்தின் விடிவுக்காய்
தனித்து உண்ணாநோன்பிருந்து
தமிழினத்துக்காய் சரித்திரம்
படைத்தாய் பார்த்தீபன்...!

நல்லூரான் வீதியில் ஐந்தம்சக்
கோரிக்கைகளை முன்வைத்து
பன்னிருநாள் மக்கள் புடைசூழ
அவர்கள் முன் பசித்திருந்தாய்
தீப ஒளியே பார்த்தீபன்..!

கனத்த மனத்துடன் தலைவன்
இருக்க மக்களுக்காய்
உனதுயிர் துறக்க நீயாக வந்தாய்
மௌனம் காத்தது காந்திய தேசம்
மாவீரனே பார்த்தீபன்..!

ஆண்டுகள் முப்பத்தெட்டு
உருண்டோடிவிட்டன – ஆனாலும்
தமிழர் தேசம் தலை குனிந்து
நிற்குது – நீதிக்காய்
ஒன்றுபட்டு குரல் கொடுக்க உனது நாளில்
திடம்கொள்வோம் பார்த்தீபன்...!



- அருணாசலம் சபேஷ்குமார் -

# பொகவந்தலாவையில் குளவி கொட்டு; 14 தொழிலாளர் வைத்தியசாலையில்!

**(மஸ்கெலியா)**

பொகவந்தலாவ கொட்டியாகல தோட்ட பிரிவில் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில் தேயிலை செடியின் கீழ் பகுதியில் இருந்த குளவி கலைந்து, தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டு இருந்த 12 பெண்கள் மற்றும் இரண்டு ஆண்களைக் கொட்டியுள்ளது.

குளவி கொட்டுக்கு இலக்கான 14 தொழிலாளர்களும் பொகவந்தலாவ மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வாறு குளவி கொட்டுக்கு இலக்கானவர்கள் 35 வயது தொடக்கம் 53 வயதுடையவர்கள் என்று வைத்திய சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து பொகவந்தலாவ பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# யாழ்ப்பாணம் முற்றவெளி பகுதியில் தூய்மைப்படுத்தல் சிரமதானப்பணி

நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் கிளின் சிறிலங்கா வேலைத்திட்டத்தன் ஓர் அங்கமாக யாழ் முற்றவெளி பகுதியில் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் முற்றவெளிப் பகுதியில் காணப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகள், ஏனைய கழிவுப் பொருட்கள் நேற்று சுன்னாகம் ரோட்டரிக் கழகத்தால் சிரமதான பணி மூலம் அகற்றப்பட்டு அந்தப் பிரதேசம் தூய்மையாக்கப்பட்டது.

இந்த சிரமதான பணியில் ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள், ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பிரதேசம் நெடுந்தூர தனியார் பஸ்கள் தரித்து நிற்கும் இடமாகவும் மக்கள் அதிக எண்ணிக்கையில் ஒன்று கூடும் இடமாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான சிரமதானப் பணிகளை யாழ் மாவட்டத்தின் முக்கியமான பகுதிகளிலும் ரோட்டரிக் கழகம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.








# தமிழ்த் தேசியம் பேசுகின்ற சகல கட்சிகளும் கடையை மூடிவிட்டுச் செல்லும் நிலை வரும்!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. எச்சரிக்கை

**(கி.வசந்தன்)**

வடக்கு, கிழக்கு மாகாணசபை மாற்று கட்சிகளின் அதிகாரங்களிற்குள் செல்கின்ற வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியத்தைப் பற்றிப் பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டு செல்லும் நிலை ஏற்படும் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நேற்று வவுனியாவில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

மாகாணசபை தேர்தலை நடத்த வேண்டும் என்று எல்லோரும் கோரிக்கை விடுகின்ற இச்சந்தர்ப்பத்திலே அதிகார பரவலாக்களின் ஊடாக மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்தியாவும் ஐ.நா. சபையிலே அக் கோரிக்கையை முன்வைத்துள்ளது. இதேவேளை மாகாணசபை தேர்தல் நடைபெறும் என்றால் எல்லா கட்சிகளும் ஒன்றிணைந்து அந்தத் தேர்தலில் பங்குகொள்ள வேண்டும் என்று இந்திய தூதுவரும் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன ஒரு நியாயமான விடயமாக நான் பார்க்கின்றேன். எங்களை பொறுத்த வரையிலே ஒற்றுமை இல்லாமை என்பதன் விளைவை கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே நாங்கள் அனுபவித்திருந்தோம். குறிப்பாக எமது ஒற்றுமை இன்மை என்பதன் காரணமாக தமிழ் மக்கள் விரக்தியுடன் இருக்கின்றமையுடன் ஒற்றுமையான சூழலை எதிர்பார்த்து இருக்கின்றனர். இதன் காரணமாகவே மக்கள் யாருக்கு வாக்கு போடுவது என்ற குழப்பத்தில் இருந்தனர். மேலும் இந்த ஒற்றுமையின்மையினாலேயே புதிய நபரை – புதிய அரசை – தெரிவு செய்ய வேண்டும் என்ற ரீதியிலேயே நாடாளுமன்றத் தேர்தலிலே மக்கள் வாக்களித்திருந்தனர். இதன் காராணமாகவே முன் எப்போதும் இல்லாத வகையிலே வடக்கு, கிழக்கு பகுதிகளில் தேசிய கட்சிகளின் பிரதிநிதித்துவம் உருவாகியது. இது ஒரு செய்தியாகவே நாம் பார்க்க வேண்டும்.

குறிப்பாக எமது செயற்பாடுகள் வெறுமனவே பேச்சளவில் காணப்படுமேயானால் எமது மாகாணசபை நிச்சயமாக மாற்று கட்சிகளின் அதிகாரங்களிற்குள் செல்கின்ற வாய்ப்பு ஏற்படும். அத்தகைய் பட்சத்தில் தமிழ்த் தேசியத்தைப் பற்றி பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டு செல்லும் நிலை ஏற்படும்.

எங்களுடைய மக்களுடைய எதிர் காலத்துக்காக, இனப்பிரச்சினைக்காக, எமது மண் பறிபோகாமல் இருப்பதற்காக நாம் போராட வேண்டும். எனவே அதற்கு நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இருக்கின்றது. அத்தோடு அதற்காக நாங்கள் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம் என்றாலும் அதற்கான சந்தர்ப்பம் எட்டப் படவில்லை.

ஐ.நாவிற்கு கடிதம் எழுதும் போதோ அல்லது ஐ.நாவிற்கு கையொப்பம் இடுகின்ற சந்தர்ப்பத்தின் போதோ ஒற்றுமையாக இருக்கின்ற தமிழ்க் கட்சிகள், தேர்தல் காலத்தில் மாத்திரம் ஒற்றுமையாக இருக்காமல் பிரிந்து செல்லுகின்ற அபாய நிலை இருக்கின்றது. எனவே ஒற்றுமையாக மக்களுடைய எதிர்பார்ப்பை நிறைவு செய்கின்ற கட்சிகளாக இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரையிலே எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுகின்ற சூழலை எதிர்பார்க்கின்றோம். தமிழ் தேசியத்தினை நேசிக்கின்ற கட்சிகளினை ஒற்றுமைப்படுத்துதல் என்ற ரீதியில் நிச்சயமாக தமிழ் அரசு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருக்கின்றோம். குறிப்பாக இம்மாகாண சபையிலே அவர்களையும் இணைத்–துக் கொண்டு பயணிப்பது என்பதுதான் சாலச் சிறந்ததாகும்.

ஒவ்வொரு வருடமும் நாடாளுமன்றத்தில் சொத்து விவரம் ஒப்படைக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையில் நான் எனது சொத்து விவரத்தினை வழங்கி வருகின்றேன். ஒவ்வொரு வருடமும் சொத்து விவரங்கள் நாடாளுமன்றத்திற்கு வழங்காத பட்சத்தில் நீதிமன்றத்திற்கு செல்கின்ற நிலை ஏற்படும். எனவே நாம் ஒவ்வொரு வருடமும் வழங்கி வருகின்ற போதும் அது வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்துகின்ற நிலையினை ஏற்படுத்தப்படவில்லை. எனவே இனி வரும் காலங்களிலே எனது சொத்து விவ்ரங்கள் வெளிப்படத்தன்மையில் வெளியிடப்படும் என நம்புகின்றேன். – எனத் தெரிவித்தார்.

# தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிப்பு உரிய படிமுறைகள் ஊடாக முன்னெடுப்பு

## நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

உரிய படிமுறைகள் ஊடாக தென்மராட்சிப் பிரதேச செயலகம் இரண்டாகப் பிரிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான க.இளங்குமரன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போது பொது அமைப்புக்களுடைய பிரதிநிதிகள் தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிப்பு விவகாரம் தொடர்பாக கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்–




தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிப்பதற்குரிய முன்நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தென்மராட்சியை இரண்டாக பிரிப்போம் என உறுதியளித்திருக்கின்றோம். அதனை ஒரே நாளில் நடைமுறைப்படுத்த முடியாது. உரிய படிமுறைகள் ஊடாக அதனைச் செய்வோம்.

பிரதேச செயலகத்தை இரண்டாக பிரிப்பதானால் அதற்குரிய இடத்தெரிவு, அதிகாரிகள் வெற்றிடம் நிரப்பப்படல் ஆகியன செய்யப்பட வேண்டும். எனவே உரிய படிமுறை ஊடாகவே அதனை நடைமுறைப்படுத்த முடியும். – என மேலும் அவர் சுட்டிக்காட்டினார்.

# மலையக அதிகார சபை கலைக்கப்படமாட்டாது எனில் வரவு-செலவுத் திட்டத்தில் போதுமான நிதி ஒதுக்குங்கள்

## முன்னாள் எம்.பி. திலகர் அரசாங்கத்திடம் கோரிக்கை

(பொகவந்தலாவ எஸ் சதீஸ்)

அரச பொறிமுறை ஊடாக மலையக மக்களுக்கு சேவையாற்றக் கூடிய விதத்தில் உருவாக்கப்பட்ட மலையக அதிகார சபை கலைக்கப்பட மாட்டாது எனும் எழுத்து உத்தரவாதத்தை வழங்குவதோடு, 2026 ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்வதோடு தொடர்ந்து அதிகார சபையை நடத்திச் செல்வதை உறுதி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி பொது மக்கள் கையெழுது இயக்கம் மூலமாக கோரிக்கை வைக்கிறோம்.

– இவ்வாறு மலையக அரசியல் அரங்கத்தின் செயலதிபரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.

மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் ஹட்டனில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே திலகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு :–

மலையக அரசியல் வரலாற்றில் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும். அன்றைய தினமே மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வகையில் பிரதேச சபைச் சட்டம் திருத்தப்பட்டதுடன், பெருந்தோட்டப் பிராந்தியத்தில் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை (மலையக அதிகார சபை) சட்டம் ஆகியன இலங்கைப் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஆனாலும் இன்று 7 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில் மலையக அதிகார சபையைக் கலைப்பதற்கு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இந்த அதிகார சபை கலைக்கப்படக்கூடாது என அதன் பணிப்பாளர் சபை எழுத்து மூல மனு ஒன்றை அரசாங்கத்திடம் கையளித்து இருப்பதையும் அறிகிறோம். அரசியல் தரப்பில் கலைக்கப்பட மாட்டாது எனும் வாய்மொழி உத்தரவாதம் மட்டுமே வழங்கப்படுகிறது.




மலையகப் பெருந்தோட்ட மக்களின் சமூக நல, உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை முன்னெடுப்பதற்கு என உருவாக்கப்பட்டதே பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையாகும் (NEVIDA). இதுவே மலையக அபிவிருத்தி அதிகார சபை எனப்படுகிறது.2018 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க சட்டத்தின்படி உருவாக்கப்பட்ட இந்த சபையை கலைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் 2024 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் பட்டியலிடப்பட்டு 2025 செப்டம்பரில் ஜனாதிபதியினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் மலையக சமூக ஆர்வலர்களின் கோரிக்கைகளின் பின்னர் இது கலைக்கப்படமாட்டாது என அரச தரப்பில் குறிப்பிடப்படுகிறது.

இந்தப் பின்னணியில், பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி அரசாங்கத்திடம் இந்த பொது மக்கள் மனுவை சமர்ப்பிக்கின்றோம்.

1.பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையானது கலைக்கப்படும் அரச நிறுவனங்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும்.

2.அத்தகைய நீக்கத்திற்கான தீர்மானத்தை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

3.பெருந்தோட்டப் பிராந்தியந்துக்கான புதிய கிராம அபிவிருத்தி அதிகார சபையை மறுசீரமைப்பின்பேரில் அதிகாரக் குறைப்பு செய்தல் கூடாது.

4.அதிகார சபையை தொடர்ந்து உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் எதிர்வரும் 2026 ஆண்டுக்கான வரவு – செலவு திட்டத்தில்போதுமானநிதியைஒதுக்கீடுசெய்வதுடன் அதனூடாக அபிவிருத்தி நடவடிக்கையினை முன்னெடுத்தல் வேண்டும்.

எமது மேற்படிக் கோரிக்கைகளை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு நிறைவேற்ற வேண்டும் என இம்மனுவில் கையொப்பமிட்டு சமர்க்கின்றோம்.

– இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

– என்று அவர் கூறினார்.



# ராமநாதபுரம் திருப்புல்லாணி பகுதியில் இறந்த நிலையில் ஒதுங்கிய கடல்பசு!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

தமிழ்நாடு, இராமநாதபுரம் திருப்புல்லாணி அடுத்துள்ள சேதுக்கரை தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இறந்த நிலையில் கரை ஒதுங்கிய - எட்டு வயது மதிக்கத்தக்க - கடல் பசுவை கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்து பின்னர் வனத்துறையினர் கடற்கரை மணலில் புதைத்துள்ளனர்.

மன்னார் வளைகுடா கடல் பகுதியில் அரிய வகை கடல் வாழ் உயிரினங்களான கடல் பல்லி, கடல் குதிரை, கடல் பசு, சிப்பி, சங்கு, பவளப்பாறைகள் என நூற்றுக்கணக்கான அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அடுத்த சேதுக்கரை தெற்கு மன்னார் வளைகுடா கடல் பகுதியில் இருந்து மீன் பிடிக்க செல்லும் மீனவர்கள் வலையில் சமீப காலமாக கடல் பசு, டொல்பின் ஆகியவை சிக்குகின்றன.

அவற்றை உடனடியாக மீனவர்கள் உயிருடன் பத்திரமாக கடலில் விட்டு விடுகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சேதுக்கரை தெற்கு மன்னார் வளைகுடா கடற்கரையில் இறந்த நிலையில் 8 வயது மதிக்கத்தக்க ஆபிரியா என அழைக்கப்படும் பெண் கடல் பசு ஒன்று கரை ஒதுங்கியது.

இதனை அவதானித்த மீனவர்கள் கீழக்கரை வனத்துறையினருக்கு தகவல் அளித்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வனத்துறையினர் இறந்து கரை ஒதுங்கிய கடல் பசுவை ஆய்வு செய்து உடற்கூறாய்வுக்காக கால்நடை மருத்துவருக்கு தகவல் தெரிவித்தனர்.

இறந்த நிலையில் கரை ஒதுங்கியது ஆபிரியா என அழைக்கப்படும் பெண் கடல் பசு என்றும் அது சுமார் 300 கிலோ எடை கொண்டது என்றும், அதன் அகலம் 115 செ.மீ, சுற்றளவு 230 செ.மீ தெரியவந்துள்ளதாக வனத்துறையினர் தெரிவித்தனர்.

மேலும் கடல் பசு பாறைகளில் முட்டியதால் உயிரிழந்ததா அல்லது உடல் நிலை சரியில்லாமல் வயதின் மூப்பின் காரணமாக உயிரிழந்ததா என கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்த பின்னர் முழுமையான காரணம் தெரியவரும் என கீழக்கரை வனச்சரகர் தெரிவித்தார்.

இதனிடையே சம்பவ இடத்திற்கு வந்த கால்நடை மருத்துவர்கள் உயிரிழந்த கடல் பசுவை உடற்கூறாய்வு செய்தனர். அதன் பின் வனத்துறையினர் இறந்த கடல் பசுவை கடற்கரை மணலில் புதைத்தனர்.





# கொழும்பில் வெள்ளியன்று சிறப்புற நடைபெற்ற ‘அயலக ஆளுமைகளுக்கு அலங்காரம்’ நிகழ்வு







தமிழ்நாடு அரசின் ‘தகைசால் தமிழர்’ விருது பெற்ற இந்திய முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் முனீருல் மில்லத் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் அவர்களுக்கான பாராட்டு நிகழ்வும், இசை முரசு மர்ஹூம் நாகூர் ஈ.எம். ஹனிபா அவர்களின் பிறந்த நூற்றாண்டு நினைவேந்தல் நிகழ்வும் மகுட விழாவாக கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றது.

இதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இலங்கை நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் டாக்டர் ரிஸ்வி சாலி, மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப் ஆகியோர் முதன்மை அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் ஆரம்ப உரையை ஆற்றினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், முஜிபுர் ரஹ்மான், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், சாணக்கியன் இராசமாணிக்கம், எம்.எஸ்.உதுமா லெப்பை, ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், முன்னாள் ஆளுநர்களான செந்தில் தொண்டமான், ஆசாத் சாலி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பைசல் காசிம், எம்.எஸ். தௌபீக், எம்.எஸ். நளீம், அலி சாஹிர் மௌலானா, எம்.எஸ். எம்.அஸ்லம், ஷபீக் ரஜாப்தீன் ஆகியோர் உட்பட அரசியல் முக்கியஸ்தர்களும், சமூக ஆர்வலர்களும் வருகை தந்திருந்தனர். அவர்களில் சிலரது கருத்துரைகளும் இடம்பெற்றன.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் நாடு வக்பு வாரிய தலைவருமான கே.நவாஸ் கனி, தமிழ் நாடு சட்ட மன்ற நாகப்பட்டின உறுப்பினர் ஆளூர் ஷாநவாஸ், இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கின் தமிழ்நாடு பொதுச் செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம்.முஹம்மது அபூபக்கர், முன்னாள் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் எம்.அப்துல் ரஹ்மான், சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் ஜீ.எம். அக்பர் அலி, பெரு நகர சென்னை மாநகராட்சி(எழும்பூர்) கவுன்ஸிலர் பாத்திமா முஸப்பர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுத்தீன், முஸ்லிம் மீடியா போரம் தலைவர் என். எம்.அமீன் ஆகியோரும் உரையாற்றினர்.

இந்தியப் பாடகர்களான இறையன்பன் குத்தூஸ், தமிழ்மாமணி தேரிழந்தூர் தாஜ/தீன், இலங்கைப் பாடகர்களான இசைச் சுடர் கலைக்கமல், மருதமுனை கமால், மொய்னா பேகம் மொகிதீன் பேக் ஆகியோர் இசைமுரசு நாகூர் ஈ.எம். ஹனீபாவின் பாடல்களை இசைத்தனர்.

தமிழ்நாட்டு ஆளுமைகள் இருவருக்கான இந்த விழாவை இலங்கையில் விமரிசையாக நடத்துவதையிட்டு தி.மு.க தலைவர், முதல்வர் மு. க. ஸ்டாலின், ஶ்ரீலங்கா காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அனுப்பிய சிறப்புச் செய்தியை அவரது பிரதிநிதியாக வருகை தந்திருந்த நாடாளுமன்ற முன்னாள் தி.மு.க.உறுப்பினர் எம். எம்.அப்துல்லாஹ் வாசித்ததுடன், அதை முஸ்லிம் காங்கிரஸ் தலைவரிடம் நேரில் கையளித்தார்.

தமிழ்நாட்டிலிருந்து மட்டுமல்லாது, துபாய், மலேசியா, சிங்கப்பூர் ஆகியவற்றிலிருந்தும் அதிதிகள் வருகை தந்திருந்தனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பற்றிய ஆவணப் படமும் காண்பிக்கப்பட்டது.

பேராசிரியர் காதர் மொகிதீன் ஏற்புரை நிகழ்த்தினார்.




# குரங்குக் கூட்டத்தால் தொல்லை அம்பாறை மாவட்ட மக்கள் சிரமம்



அம்பாறை மாவட்டத்திக் குரங்குகளின் தொல்லையால் நகர வர்த்தகர்கள், விவசாயிகள், பாதசாரிகள் பெரும் சிரமங்களை தினம் தோறும் முகம் கொடுத்து வருகின்றனர் எனக் கவலை தெரிவிக்கின்றனர்.

தினமும் கொத்தணியாக 300இற்கும் மேற்பட்ட குரங்குகள் அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடமாடி வருகின்றமையுடன் இவ்வாறு அதிகரித்து வருகின்ற குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்ற குற்றச்சாட்டும் பொதுமக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் சவளக்கடை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, மருதமுனை, சேனைக்குடியிருப்பு, மணல்சேனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, மத்தியமுகாம், சொறிக்கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அட்டப்பளம், ஒலுவில், வளத்தாபிட்டி, அக்கரைப்பற்று, தம்பிலுவில், பொத்துவில்,இறக்காமம், பகுதிகளில் உள்ள விவசாய நிலங்களில் விதைப்பு மேற்கொள்ளப்பட்ட நெற்களை சேதப்படுத்துவதும் வியாபார கடைகளில் காட்சிபடுத்தப்பட்டுள்ள பொருள்களை நாசப்படுத்தி விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பழங்களையும் உண்டு வீணாக்குகின்றன எனக் குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காக முன்வைக்கப்படுகின்றன.

இது தவிர இம்மாவட்டத்தில் வீதிகளில் செல்கின்ற பாதசாரிகள், வாகனங்களின் போக்குவரத்தை குரங்குகள் கூட்டங்களாக வீதியின் நடுவில் சஞ்சாரம் செய்து தடுத்து வருகின்றன. இதனால் பல விபத்துக்களும் ஏற்பட்டுள்ளன. மேலும் இப்பிரதேச மக்கள் பொருள்களை எடுத்து செல்லும் போது கைகளில் உள்ள உணவு பொதிகளை பிடுங்குவதாகவும் இதன் காரணமாக இப்பகுதி மக்கள் பல இடர்களை சந்திக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே வேளை குரங்குகளின் அட்டகாசத்தால் பல பகுதிகளில் உள்ள மாணவர்களும் பல சிரமங்களை எதிர் கொள்கின்றனர். அத்தோடு வீடுகளில் உடைகளை வெளியில் உலரவிடும் சந்தர்ப்பத்தில் குரங்குகள் அவற்றை கொண்டுசெல்வதால் பாடசாலை மாணவர்கள் உட்பட வீட்டில் உள்ள பெரியவர்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாறை மாவட்டத்தின் உகண தமண பொலிஸ் பிரிவுகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்கள் மற்றும் பஸ்களில் ஏறி குரங்குகள் அட்டகாசம் செய்வதனால் வாகன சாரதிகள் மற்றும் பயணிகளும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அம்பாறை மாவட்ட புற நகரங்களை அண்டிய மலைப்பிரதேசங்களில் மலைப்பாங்கான இடங்களில் காணப்படும் குரங்குகள் அடிக்கடி ஊருக்குள் வந்து தொல்லை கொடுக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இம்மாவட்டத்தில் குரங்குகளின் தொடர் அட்டகாசத்தால் பொறுமை இழந்த பல விவசாயிகள் விவசாயத்தை கைவிட்ட சந்தர்ப்பங்களும் உள்ளன. மேலும் ஒவ்வொரு வருடமும் நேரடியாகவும் மறைமுகமாகவும் மில்லியன் கணக்கான ரூபா குரங்குகளினால் வீணாவதுடன் பல விவசாய நிலங்கள் குரங்குகளின் நடமாட்டம், தொல்லை காரணமாக தரிசாக மாறியுள்ளன. இங்கு குரங்குகள் விவசாய நிலங்களில் உள்ள பயிர்களை உண்பதுடன் அதை முழுவதுமாக வீணாக்குவதும் இதற்கு பிரதான காரணமாகும்.

அது மாத்திரமன்றி நகரங்களில் முறையாக அகற்றப்படாத திண்மக்கழிவுகளை உண்டு அதிக எண்ணிக்கையில் குரங்குகள் பெருகி வருவதுடன் இதனால் விவசாய நிலத்தை பாதுகாப்பது சிரமமாக உள்ளதால் சில விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை கைவிட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் பொதுவாக மலைப்பிரதேசங்களில் மலைப்பாங்கான இடங்களில் காணப்படும் குரங்குகள் ஊருக்குள் வந்து செல்வதுடன் வீதியோரங்களில் மட்டுமல்லாமல் சில சமயம் ஊருக்குள்ளும் வந்துவிடுகின்றன. இப்பகுதி மக்களின் பாதுகாப்பு நலன் கருதி பொலிஸ் நிலையம் மற்றும் வன அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். வீதியோரங்களில் மட்டுமல்லாமல் சில சமயம் ஊருக்குள்ளும் குரங்குகள் வந்துவிடுகின்றன.

இவ்வாறு குரங்கு தொல்லை தொடர்கின்ற போதிலும் சர்வதேச குரங்குகள் தினம் ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி கொண்டாடப்பட்டு வருகின்றது. அதே வேளை அரசியலிலும் குரங்கு என்ற தொனிப்பொருள் தற்போது எதிர்கொள்ளப்படுகின்றது.

இதற்கு உதாரணமாக இலங்கையில் அதிகரித்து வருகின்ற குரங்குகளை சீனா நாட்டிற்கு ஏற்றுமதி செய்து குரங்கு தொல்லைகளை ஒழிக்க முடியும் என சமூக வலைத்தளங்களில் காணொளிகள், கருத்துக்கள் வெளியாகி வைரலாகி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# முத்துநகர் விவசாயிகள் தொடர்ந்தும் நேற்றும் சத்தியாக்கிரகப் போராட்டம்

திருகோணமலை-முத்துநகர் விவசாயிகள் திருகோணமலை மாவட்ட செயலகம் முன்பாக முன்னெடுக்கும் தொடர் சத்தியாக்கிரகம் தொடர்ந்து 4 ஆவது நாளாகவும் நேற்று இடம்பெற்றது.

"விவசாயிகளிடமிருந்து கொள்ளையடித்து கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட முத்து நகர் விளைநிலங்களை உடனடியாகத் திருப்பிக் கொடு!","இந்தியக் கம்பனிகளின் நில மற்றும் வளச் சூறையாடலுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்குவோம்!", "பொய்கள் வேண்டாம்!", "விவசாயிகளை இப்படியா நடாத்துவது?" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு முத்து நகர் விவசாயிகள் மற்றும் மக்கள் போராட்ட இயக்கம், அகில இலங்கை விவசாய சம்மேளன பிரதிநிதிகள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

முத்து நகர் விவசாயிகளின் விவசாய காணிகள் தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின் சக்தி உற்பத்திக்காக வழங்கப்பட்டதையடுத்து இச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அந்த விவசாயிகள் முன்னெடுத்துள்ளனர். விவசாயத்தை நம்பியே வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் தற்போது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் தொடர் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையிலும் கூட தீர்க்கமான முடிவு எட்டப்படவில்லை என்றும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# கொழும்புத்துறைப் பகுதியில் மூன்று சந்தேக நபர்கள் கைது





யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறை பகுதியில்

நீண்ட நாள்களாக போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்ட மூவர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இதன் போது 180 போதை மாத்திரைகளுடன் கொழும்புத்துறையை சேர்ந்த - 18, 24 ,22 வயதுடைய - மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சீனாவை அரவணைக்கும் அநுர அரசு இந்தியாவை எட்டி உதைப்பதேனோ?

**- நடராசா லோகதயாளன் -**

இலங்கை முழுவதும் அல்லது வடக்கு கிழக்கில் இந்தியா எந்த வகையான திட்டங்களையும் வழங்கி விடக்கூடாது என தற்போதைய அரசு திட்டமிட்டுச் செயல்படுவதாகக் குற்றஞ் சாட்டப்படுகின்றது.

இந்தக் குற்றச் சாட்டிற்கு பல உதாரணங்கள், ஆதாரங்கள் முன் வைக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு 2025-09-18 அன்று வருகைதந்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கா காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி



Figure 1.1: Study Area of Fisheries – KKS West FI Division

இடம்பெறவே மாட்டாது எனக் குறிப்பிட்டு அதற்கு முக்கியமாக இரு காரணங்களையும் கூறினார்.

அபிவிருத்தியின் பயனை அடைய முடியாத அம்பாந்தோட்டை துறைமுகம்போன்று இதுவும் அமையும் என்பது ஒரு காரணம். இரண்டாவது, இந்த அபிவிருத்திக்கு இந்தியா வழங்க முன் வந்த நிதி உதவு போதாது என்பது.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்காக இந்தியா வழங்க முன் வந்ததொகை 63.5 மில்லியன் டொலர். இந்த தொகையை வழங்க முன் வந்தது 2022 ஆண்டில் என்பதனை அமைச்சர் உச்சரிக்க மறந்து விட்டாரா அல்லது மறைளத்து விட்டாரா என்பதனைக் கண்டறிய முடியவில்லை.

இதேநேரம் 63.5 மில்லியன் டொலர் போதாது எனில் 2026 ஆம் ஆண்டில் பணியை மேற்கொள்வதற்கு மேலதிகமாக எவ்வளவு நுதி தேவை என இந்தியாவிடம் எந்தவொரு கோரிக்கையும் முன் வைக்கப்படவோ அல்லது அதற்கு இந்தியா மறுப்புத் தெரிவித்த சம்பவமோ இடம்பெறவில்லை.

கொடுத்த உதவி நிதிக்கான பணியை ஆரம்பித்தால் பற்றாக்குறை ஏற்படும் நிதிக்குக் கோரிக்கை முன் வைக்க முடியும். இதற்கு உதாரணமாக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான நிது போதாமை ஏற்பட்டபோதும் சரி, யாழில் அமைக்கப்பட்ட கலாச்சார மண்டப அமைப்புக்கு திட்ட வேலைகளை மேற்கொண்ட போது நிதி போதாமை ஏற்பட்ட சமயங்களில் மேலதிக நிதி பெறப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட்டமையை நினைவு கொள்ளலாம்.

யாழில் கலாச்சார மண்டப அமைப்புக்கு திட்ட வேலைகள் இந்திய உதவியின் கீழ் 100 கோடி (இந்திய நாணயம்) ரூபாவில் முன்னெடுக்கப்பட்டபோது இறுதிக்கட்டத்தில் பற்றாக்குறையாகக் காணப்பட்ட மேலும் 12 கோடி ரூபாவும் இந்தியத் தரப்பால் செலவு செய்யப்பட்டே பணிகள் முடிவுறுத்தப்பட்டன.

இங்கே காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திப் பணிக்கு ஒதுக்கிய நிதி போதாது மிகுதிப் பணம் தரமுடியுமா என இலங்கை அரசு இந்தியாவிடம் கோரிக்கை முன் வைத்து, அது மறுக்கப்பட்டால் அல்லது காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்திக்கு புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதனை துறைமுகம் வேண்டும் எனக் கோரும் தரப்பிடம்

தொடர்ச்சி ▼



Figure 2.4: Condition of the Existing Breakwater




# சீனாவை அரவணைக்கும் அநுர அரசு இந்தியாவை எட்டி உதைப்பதேனோ?

தொடர்ச்சி▲

கையளித்து, இதன் மிகுதியை பெற இந்தியா விடம் வலியுறுத்துங்கள் என அனுகியிருந்தால் அதுவே சரியாக இருந்திருக்கும். இவை எதுவுமே இடம்பெறவில்லை. மாறாக வெளியில் தெரியாத ஓர் ஆய்வு செய்துள்ளதாக அமைச்சர் அறிவிப்புச் செய்துள்ளார்.


துறைமுக அபிவிருத்தி இந்த நிலைமை எனில், இலங்கை அரசினால் முடியாத காரியம் என்பதனை அறிந்த பல பல்கலைக்கழகங்கள், மருத்துவ மனைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என 45 ற்கும் மேற்பட்ட அமைப்புக்கள் தமக்கு இலவச வாகன வசதி வழங்குமாறு இந்தியத் தூதரகத்தை நாடி எழுத்திலும் விண்ணப்பித்தன. இவற்றை பரிசீலித்த இந்தியத் தூதரகம் அதில் உண்மை, தேவை, முன்னிரிமை எனப் பட்டியலப்படுத்தி 36 வாகனங்களை இறக்குமதி செய்து இலவசமாக வழங்க முன்வந்தத்ய்.

இவ்வாறு இலவசமாக வழங்கும் 36 வாகனங்களையும் நாட்டிற்குள் கொண்டு வந்து, கோரியவர்களிற்கு இலவசமாகவே வழங்குவதற்கு, அவற்றிற்கான இறக்குமதி வரிக்கு விலக்கலிக்குமாறு கோரி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக விண்ணப்பித்தது. அவற்றை ஆராய்ந்த அநுர அரசு வெறுமனே 5 வாகனங்களிற்கு மட்டுமே அந்த அனுமதியை வழங்கியுள்ளதனால், அதனை இறக்குமதி செய்து 5 தரப்புகளுக்கு மட்டும் வழங்கும் செயலபாடு மூலம் ஏனையோரின் எதிர்ப்பை சம்பாதிக்க விரும்பாத இந்தியா தடுமாறுகின்றது எனத் தெரிகின்றது.

வாகன உதவித் திட்ட இறக்குமதி இந்தக் கட்டம் என்றால், தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையேயான பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கும் திட்டம் தொடர்பிலும், அதற்கு ஏற்படும் செலவை ஈடு செய்ய இந்தியா தயார் என்பது தொடர்பிலும், இலங்கைத் தரப்பில் மூத்த அமைச்சர்கள், அதிகாரிகள் என 4 தடவைகள் இந்தியா சந்தித்துக் கலந்துரையாடி கோரிக்கையை முன் வைத்து, விவரம் வழங்கியது. ஆனால் எந்த அமைச்சோ அல்லது அதிகாரிகளோ இந்த விடயத்தில் இந்தியாவிற்கு எந்தவிதமான ஒரு பதிலும் வழங்கவில்லை.

இதேநேரம் அநுர அரசினால் இந்த ஆண்டின் இந்த மாதம் கொண்டு வரப்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளைப் பறிக்கும் சட்டத்தின் பிரகாரம் அரச இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மஹிந்த, ரணில், மைத்திரி போன்றோரை ஓடோடிச் சென்று சந்தித்த சீனத் தூதுவர், அந்தக் களைப்பாற முன்னரே ஜனாதிபதி அநுராவின் அரவணைப்பையும் நாடிச் சென்றார்.

இதன் மூலம் தேசிய மக்கள் சக்தியாக மாறி அரசமைத்தாலும், ஜே.வி.பியின் இந்திய எதிர்ப்புக் கொள்கையில் – அநுர அரசில் – எத்த மாற்றமும் இல்லாது தம்மை ஓரங்கட்டுவதாகவே இந்தியா தற்போது உணர்கின்ற நிலைமையே உள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.


Environmental Impact Assessment Report

The Proposed Rehabilitation of Port of Kankesanturai (KKS) in Jaffna District

Project Approving Agency:
Coast Conservation and Coastal Resources Management Department
Project Proponent:
Sri Lanka Ports Authority
EIA Consultant:
Lanka Hydraulic Institute



# மன்னாரில் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு வவுனியாவில் இருந்து அணி திரண்ட இளையோர்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைத்தல் மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டம் நேற்று சனிக்கிழமை 49 ஆவது நாளாக தொடர்ந்து செல்கின்ற நிலையில் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா பம்பைமடுவில் இருந்து அருட்தந்தை, அருட்சகோதரிகள் தலைமையில் இளையோர் குழு ஒன்று வருகை தந்து தமது ஆதரவை தெரிவித்துள்ளது.

குறித்த குழுவினர் நேற்று சனிக்கிழமை மாலை வருகை தந்து குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

எத இளையோர் காற்றாலை மற்றும் கனிய மணல் அகழ்வுக்கு எதிராக எழுதப்பட்ட பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்திற்கு நாளாந்தம் மன்னார் மாவட்டம் உள்ளடங்கலாக நாட்டின் பல பாகங்களில் இருந்தும் கிராம மக்கள், பொது மற்றும் சிவில் அமைப்புக்களைச் சேர்ந்தோர் தொடர்ச்சியாக ஆதரவை வழங்கி வருகின்றனர்.











# இன்றைய ராசி பலன்கள் -21.09.2025




இன்று அனுகூலமான நாள். இன்று வெளிப்படையாக இருப்பீர்கள். உங்கள் செயல்களில் உறுதியுடனும் நேர்மறையாகவும் இருங்கள்.

உங்கள் பணியை முறையான அணுகுமுறையுடன் கையாள வேண்டும் நேர்மறையான பலன்களைப் பெறுவதற்கு இது மிகவும் அவசியம்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறை நன்மை தரும்.

தேவையற்ற செலவினங்களை சந்திக்கும் கட்டாயம் உண்டாகும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

நடப்பவைகளை லேசாக எடுத்துக்கொள்வது நல்லது. அதிகமாக யோசிப்பதையும் மிகுந்த உணர்ச்சிவசப்படுதலையும் தவிர்க்க வேண்டும்.




இன்று துடிப்புடன் காணப்படுவீர்கள். உங்கள் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வீர்கள். இன்று பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும்.

நீங்கள் உங்கள் பணியில் சவால்களை எதிர்கொள்வதற்கு தயாராக இருக்க வேண்டும். உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு உன்னதமான திட்டமிடல் வேண்டும்.

உங்கள் துணையுடன் நுண்ணுணர்வோடு காணப்படுவீர்கள். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை பராமரிக்க இதனை தவிர்த்தல் வேண்டும்.

பணவரவிற்கான சாத்தியம் இல்லை. உங்கள் நிதிநிலையை நன்றாக பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




சில நேர்மறையான மாற்றங்கள் உங்களை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்கும். உங்களிடம் காணப்படும் உறுதி உங்கள் வெற்றிக்கு வழிகாட்டும்.

உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். பணிச்சுமை காரணமாக நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.

மிகுந்த பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் கடுமையாக நடந்துகொள்ள நேரலாம். உங்கள் துணையிடம் பக்குவமான அணுகுமுறையை கையாள வேண்டும்.

பணப் பற்றாக்குறையை சந்திப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றது.

தலைவலி அல்லது தொண்டை சம்பந்தமான வலி ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் ஆரோக்கியத்தில் கவனமாக இருப்பது நல்லது.




முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது சிறிது கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிடில் பிரச்சினைகளைச் சந்திக்க நேரும்.

நீங்கள் பணி நிமித்தமாக ஒரு சிறிய பயணம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

உங்கள் மனதில் காதல் வயப்பட்ட எண்ணங்கள் காணப்படும். உங்கள் துணையுடனான நடத்தையில் அது வெளிப்படும்.

நல்ல விசேஷங்களுக்காக பணம் செலவு செய்ய நேரிடும். உங்கள் உடன் பிறந்தோர் வீட்டு விசேஷங்களில் பங்கேற்பீர்கள்.

இன்று மிகுந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தை நன்கு பராமரிக்க உதவும்.




ஸ்ரீஇன்று உற்சாகமாக காணப்படுவீர்கள். அதனால் திருப்தி ஏற்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைவீர்கள்.

உங்களின் திறமை காரணமாக பணிகளை செவ்வனே செய்து முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் மனதில் உணர்ச்சிகரமான உணர்வுகள் காணப்படும். உங்கள் துணையுடனான உறவை இது வலுப்படுத்தும்.

நிதிநிலைமை நன்றாக இருக்கும். உங்களால் வங்கியில் பணத்தை சேமித்து சேமிப்பை அதிகமாக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியளிக்கும்.

மகிழ்ச்சியின் காரணமாக இன்று ஆற்றலுடனும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




நீங்கள் உங்கள் வருங்காலத்திலும் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்த வேண்டும்.

பணிகளைப் பொறுத்தவரை இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்காது. பணிச்சுமை அதிகமாகக் காணப்படும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்கவைத்துக் கொள்வதற்கான நோக்கமும் ஆற்றலும் குறைந்து காணப்படும். நட்பான அணுகுமுறையைக் கையாளவும்.

பணப்புழக்கம் உற்சாகமளிக்கும் வகையில் காணப்படாது. கூடுதல் செலவினங்கள் செய்ய நேரிடும்.

மனஅழுத்தத்தின் காரணமாக கால் வலி மற்றும் முதுகு விறைப்பு போன்ற உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இனிய பாடல்களைக் கேட்பதன் மூலம் உங்களை ஆசுவாசப்படுத்திக்கொள்ளுங்கள்.




நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் நீங்கள் அதை சரிகட்டி செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்ள அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க முடியும்.

பணஇழப்பிற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தொண்டை எரிச்சலுக்கான சாத்தியம் காணப்படுகின்றது. குளுமையான உணவு உட்கொள்வதை தவிரத்தல் நல்லது.




அதிர்ஷ்டகரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

பணிகள் நலம் பயப்பதாக காணப்படும். சலுகைகளும் ஊக்கத்தொகையும் கிடைக்க வாய்ப்பு உள்ளது. அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உணர்ச்சிப் பூர்வமாக நடந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையை மகிழ்விக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். பயனுள்ள வகையிலும் நல்ல செயலுக்காகவும் பணத்தை செலவு செய்வீர்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படுகின்றது. நீங்கள் சுறுசுறுப்பாகவும் தைரியமாகவும் உணர்வீர்கள்

# இன்றைய ராசி பலன்கள் -21.09.2025




உங்கள் பொறுமை சோதிக்கப்படும். என்றாலும் மேறகொண்டு திட்டமிடுவதற்கு அது உங்களுக்கு நன்மை தருவதாக அமையும். பிரார்த்தனையில் ஈடுபடுவது மற்றும் மந்திரங்களை கேட்பது மன அமைதியை ஏற்படுத்தும்.

சிறப்புடன் பணியாற்றுவீர்கள். பதவி உயர்வு வடிவத்தில் பாராட்டுகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் புரிந்துணர்வின் மூலம் உங்கள் துணையுடன் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்களின் அர்ப்பணிப்பான பணி காரண-மாக உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அத்தகைய உற்சாகம் உஙகளுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடனும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் பார்வை நேர் மறையானதாக காணப்படும்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவுமுறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாகக் காணப்படும் . உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று அறிவு பூர்வமான அணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் முலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் நல்ல வருமானம் கிடைக்காது.

பல்வலி அல்லது செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். ஆரோக்கியத்தில் சிறந்த கவனம் செலுத்துங்கள்.




இன்றைய நாள் முற்போக்கான நாளாக அமைய நீங்கள் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும். கவலையை விட்டொழித்து நம்பிக்கையுடன் இருங்கள்.

நீங்கள் செய்கின்ற பணியில் நல்ல பலன்களைக் காணலாம். நீங்கள் உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் நட்பான அணுகுமுறை மூலம் உங்களின் துணையை மகிழ்விப்பீர்கள். இது அவருடனான புரிந்துணர்வை அதிகரிக்கும்.

உங்களிடமுள்ள பணத்தைக் கொண்டு நலமாக இருப்பீர்கள். நீண்ட நாள் நிலுவையில் உள்ள பணம் கைக்கு கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். உங்களிடம் ஆற்றல் மிகுந்து காணப்படும்.

# ரணில் வெளியில் இருந்து செய்ய வேண்டியது அவர் சிறைக்குச் சென்ற பின்னரே நடந்துள்ளது

## உதய கம்மன்பில தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் சிதறடிக்கப்பட்ட எதிர்க்கட்சி ஒன்றுபட்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் பிவித்துரு ஹெல உறுமய தலைவருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சிறைக்கு செல்வதற்கு முன்பு எதிர்க்கட்சியை ஒன்றிணைக்க முயன்றாலும் அது வீணானது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவு மாநாட்டில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

”நீங்கள் சிறைக்கு செல்வது எங்களில் எவரின் விருப்பமும் இல்லை என்றாலும், நீங்கள் உள்ளே செல்வது ஒரு வரலாற்றுப் பணியின் தொடக்கமாக மாறியது. நீங்கள் வெளியில் இருந்து செய்யப் போவது, நீங்கள் உள்ளே சென்றபோது நடந்தது.

அப்போது முழு எதிர்க்கட்சியும் ஒன்றுபட்டிருந்தது. அப்போது கட்டமைக்கப்பட்ட தற்காலிக ஒற்றுமையை நிரந்தர ஒற்றுமையாக மாற்ற வேண்டிய நேரம் இது. இந்த பாசிசம் தோற்கடிக்கப்படும் வரை அந்த ஒற்றுமையைப் பேணுவது



இந்த சகாப்தத்தில் எங்கள் தோள்களில் ஒரு சவாலாகும்.

ரணில் விக்ரமசிங்க இதை அடைவதில் முன்னிலை வகிக்க முடியும் மற்றும் அவர் முன்னிலை வகிக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம்.

எனவே, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், எதிர் காலத்தில் எதிர்க்கட்சியில் ஒரு நிலையான ஒற்றுமையைக் கட்டியெழுப்ப முடியும்.” என்றார்.